முன்னால் கேட்கப்பட்ட கேள்விகள் என்றாலும், முன்னிருந்த சட்ட மன்றத்திற்கும், இந்தச் சட்ட மன்றத்திற்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லை. அதே உறுப்பினர்கள் மீண்டும் வந்திருக்கலாம். அதே அமைச்சர்கள் மீண்டும் வந்திருக்கலாமேதவிர, சட்டமன்ற நடவடிக்கைகள், கேள்விகள் ஆகியவை களெல்லாம் முற்றிலும் புதியவை. இது முற்றிலும் புதிய ஐந்தாவது சட்ட மன்றம்; புதிய மந்திரி சபை, அதே கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர்கள் புதியதாகக் கேட்டிருக்கலாம். கேள்விகளைப் புதுப்பிப்பது என்பதெல்லாம் இப்பொழுது எழவில்லை. ஆனால், அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதுபோல, பதில்கள் சரியாகத் தயாராகிவிட்டால், விரைவாக அனுப்புவார்கள், விரைவாக அனுப்பவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில்தான் இங்கே இன்று ஒரு குறுகிய காலக் கேள்வி வந்திருக்கிறது. இன்றைக்கு வினாக்கள்-விடைகள் நேரத்தில் ஒரு குறுகிய காலக் கேள்விக்கு விடை அளிக்கப்படும். வினாவைக் கேட்டிருப்பவர் திருப்பூர் தொகுதி உறுப்பினர். அதுமாதிரி விடைகள் இந்த இரண்டு நாட்களுக்குள் வந்தால், இங்கே பதில் அளிக்கப்படும். இதிலே தாமதமோ அல்லது துரிதப்படுத்தாத தன்மை எதுவுமோ இல்லை என்று கூறி, முதல் அலுவலாக 'வினாக்கள்-விடைகள்' இருப்பதால், திருப்பூர் தொகுதி உறுப்பினர் திரு. சு. துரைசாமி அவர்களை அவருடைய குறுகிய கால வினாவைக் கேட்கும்படி அழைக்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வெள்ளக்கோவில் தொகுதியில் தேர்தல் தகராறுகள்

* குறுகிய கால வினா—எண் 1 திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தல் தகராறு காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 6--3--1971 அன்று பெருந்துறை காவல் துறை இன்ஸ்பெக்டர் தாசநாயக்கன்பட்டி கிராமத்திற்குச் சென்று தேர்தல் சம்பந்தமாகக் கொடுக்கப் பட்ட புகார் ஒன்றை, விசாரணை செய்துகொண்டிருந்த சமயம் வெள்ளக் கோவில் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் திரு. டி. ராமசாமி தன் நண்பர்கள் இருவர்களுடன் அவ்விடம் வந்து சேர்ந்தார். அதே சமயத்தில் வெள்ளக் கோவில் சட்ட மன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் திரு. அப்பன் என்கிற பழனிசாமி மற்றும் சிலருடன் கூட வந்தார். இரு தரப்பாருக்குமிடையே சிறிய கலவரம் மூண்டது. திரு. டி. ராமசாமி தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டார். கூடியிருந்தோர் திரு. ராமசாமியைத் தாக்கலானார்கள். மீண்டும் அதே துப்பாக்கியை எடுத்து, கூட்டத்தினரை நோக்கி இரண்டு முறை சுட்டார். கூட்டத்திலிருந்த ஒருவர் கழுத்தில் குண்டு பாய்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். திரு. டி. ராமசாமியும் அவரது

1971 ஏப்ரல் 1]

நண்பர் இருவரும் கூட்டத்தினர் தாக்கியதால் காயமடைந்தார்கள். இது குறித்து வழக்கு குற்ற எண். 119/71 ஆக பதிவு செய்யப்பட்டு புலனாய்வுத் துறை குற்றப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகராறு நடந்த இடத்தில் போலீஸ் அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்க அந்த அதிகாரிகள் தவறிவிட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது சம்பந்தமாக 7 புகார்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவேதான் இதைப்பற்றி சி.ஐ.டி. இலாகாவைத் கொண்டே தகுந்த புலனாய்வு செய்வதற்காக இப்பொழுது உத்தரவிடப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த விசாரணைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, will the Hon. Minister be pleased to state the steps taken by the Government to see that such incidents, to whichever party the concerned persons belong, are put a stop at least hereafter? May I know what are the steps taken by the Government to see that such incidents—even in Perambur a gentleman by name Thiru Guruviah belonging to the Nijalingappa Congress expired due to some unfortunate incident—do not recur in future? Will it not be possible for Government to see that such incidents are prevented? Even small pinpricks like victimisation of individuals who had worked for some political parties should be prevented. Will the Hon. Minister consider the desirability of appointing an officer of the rank of a D.I.G. to tackle these things immediately? Will the Hon. Minister see to it that an officer of that calibre is appointed?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது ஒரு காங்கிரஸ்காரர் ஒரு தி.மு.க. கூட்டத்தினரை நோக்கித் துப்பாக்கியால் சுட்ட பிரச்னையைப்பற்றிய கேள்வியாகும். இதில் நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் குருவய்யா விஷயத்தைக் கொண்டுவந்து சேர்த்து, அதற்கு விளம்பரம்தேட முனைவது நல்லதல்ல. பொதுவாக நாட்டில் நடைபெறுகின்ற எந்த வன்முறை விஷயத்திலும், அதிலே எந்தக் கட்சியினர் சம்பந்தப்பட்டிருந்தாலும், அரசு மிகுந்த கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற உறுதியை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து, துப்பாக்கியால் ஒரு நபர் சுட்டார் என்று தெரிகிறது. அவருக்கு லைசென்ஸ் இருக்கிறதா? அப்படி லைசென்ஸ் இருக்குமானால், அம்மாதிரி உபயோகப்படுத்தியிருக்கக்கூடிய அவருடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுக்குத் துப்பாக்கி லைசென்ஸ் இருக்கிறது. அதிலே ஸி.ஐ.டி. விசாரணையெல்லாம் முடிவுற்ற பிறகுதான் லைசென்ஸ் ரத்து செய்வதுபற்றியெல்லாம் காவல் துறையினர் முடிவை மேற்கொள்வார்கள்.

திரு. என். கணபதி : இந்த சம்பவம் சம்பந்தமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்? மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தச் சம்பவம்பற்றி திரு. டி. ராமசாமி, அவர்களோடு இருந்த உத்தமபாளையம் பழனிசாமி, வெங்கடராமசாமி ஆகிய மூவரும் 7—3—1971 காலையில் கைது செய்யப்பட்டு, பிறகு கோர்ட்டாரால் நிபந்தனை ஜாமீனில் விடப்பட்டுள்ளார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இம்மாதிரியான வன்முறைச் சம்பவங்கள் பல இடங்களில் நடைபெறுகின்ற காரணத்தினால், மாவட்ட அளவிலே கலெக்டர் தலைமையிலே சமாதானக் குழு ஏற்படுத்தி, எல்லா அரசியல் கட்சியினர்களையும் அழைத்து அரசாங்கம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேர்தலில் வாக்குகள் அளிக்கும் நேரத்திற்கு முன்பாகவே அரசாங்கத்திலிருந்து அப்படி ஒரு அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தது; அதன்மேல் எல்லா மாவட்டத் தலைவர்களும், அந்த அந்த மாவட்ட அளவில் கட்சித் தலைவர்களை அழைத்து, ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்காகக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். அதையும் மீறிச் சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதன்மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, துப்பாக்கியால் சுட்ட திரு. ராமசாமி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகக்காரரைக் குறி பார்த்துச் சுட்டாரா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதெல்லாம் வழக்கு மன்றத்திலே வர வேண்டிய விஷயங்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த ராமசாமி என்பவர் துப்பாக்கி வைத்துக்கொண்டு, தேர்தலுக்கு முன்னாலேயே வாக்காளர்களைப் பயமுறுத்தினார் என்று புகார்கள் கொடுத்தும், அப்பொழுதே விசாரணை நடத்தாததால்தான் இப்படி ஏற்பட்டது என்று கூறப்படுவது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரவலாக வருகின்ற இப்படிப்பட்ட விவரங்களை விசாரிக்கத்தான், அதற்கென்றே சி.ஐ.டி. இலாகாவினரே விசாரிக்க வேண்டும் என்று பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]